## ஆறாம் ஆண்டில் அனுமதிபெற அதிபரின் புதிய நிபந்தனை

யாழ் நகர்ப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆறாம் ஆண்டில் பிள்ளைகளைச் சேர்ப்பதானால் அப் பிள்ளை 10 ஆம் ஆண்டுவரை அப்பாடசாலையிலேயே தொடர்ந்து படிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறதாம். இப்பாடசாலையில் ஆறாம் ஆண்டில் பிள்ளைகளைச் சேர்க்க விண் — 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்ட அரச அதிகாரிகள் வேலைக்கு வருவதில்லை

யாழ் மாவட்டத்திலுள்ள ஒரு சில திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகள் வேலைக்குச் சமுகமளிப்பதில்லையெனத் தெரியவருகிறது. இதனால் யாழ் அரச அதிபர் மாதாந்தம் நடாத்தும் உயர் அதிகாரிகளுக்கான மகாநாடுகளில் இவர்கள் கலந்து கொள்ளாத — 04 ஆம் பக்கம் பார்க்க

## கப்பலில் மகளை அனுப்பிய சுகாதாரப் பகுதி ஊழியர்

கடும் நோயாளிகள் மிகுந்த சிரமங்கள் கெடுபிடிகளுக்கு மத்தியில் கப்பல் மூலம் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களையும் சில பெருச்சாளிகள் விடுவதாயில்லை! கடந்த ஜனவரி 28 ஆம் திகதி புறப்பட்ட கப்பலில் கோப்பாயைச் சேர்ந்த பெண் நோயாளி ஒருவர் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 120 பிரமோதூத பங்குனி 13 ( 27-03-1991 ) புதன்

## யாழ் மாவட்ட பென்சன் வவுச்சர்களை செயலகத்தில் வைத்துத் தயாரிக்கமுயற்சி

யாழ் மாவட்டத்தில் ஓய்வு பெறும் சுமார் 20 ஆயிரம் ஓய்வூதியர்களின் பென்சன் வவுச்சர்களை இங்கு வைத்தே தயாரிப்பது பற்றி கொழும்பில் பேச்சுக்கள் நடாத்தப்பட்டன. யாழ் செயலக பிரதம கணக்காளர் எஸ். சிவபாலன் கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளருடன் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் 20 ஆயிரம் கோவைகளையும் பதிவேடுகளையும் பாதுகாப்பாக இங்கு அனுப்பிவைக்க முடியாதுள்ளதுடன் இவ் வேலைகளில் பயிற்றப்பட்ட அலுவலர்களும் இங்குஅனுப்பிவைக்க போதாதுள்ளதாகவும் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டதாம். — 04 ஆம் பக்கம் பார்க்க

★ பரீட்சைகள் ★ புத்தாண்டு ★ வெசாக் தினங்களை முன்னிட்டு

# வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்தம் செய்ய தொண்டர் ஸ்தாபனங்கள் கோரிக்கை

வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு ஸ்ரீலங்கா அரசை இங்குள்ள இரண்டு வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் கோரியுள்ளன.

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இந்த யுத்த நிறுத்தத்தை அமுல்செய்யுமாறும் வைகாசி விசாகம் வரை அதனை நீடிக்குமாறும் இவர்கள் கேட்டுள்ளனர்.

இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு அரசு இரண்டு நாள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கமுடிவு செய்துள்ளதாகவும், அத்தினங்களில் படையினர் முகாமைவிட்டு வெளியே வரமாட்டார்கள் எனவும் கூட்டுப்படைத் தலைமையகம் பரீட்சை ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கு முந்திய தினமான பெரிய வெள்ளி (29 ஆம் திகதி) காலை 6 மணிக்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புத் துறைமுகம் வந்த கப்பலில் வெடிமருந்துகள்

அதிசக்தி வாய்ந்த பீரங்கி வெடிகள் கொண்ட நூறு பெட்டிகள் கப்பல் ஒன்றில் கொழும்புத் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இரகசியத் தகவலையடுத்து இக்கப்பலைச்சோதனையிட்ட பொலிஸார் இப்பீரங்கி வெடிகுண்டுகளைக் கண்டு பிடித்தனர்.

பெல்ஜிய நாட்டுக்குச் சொந்தமான இக்கப்பல் — 04 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலைக் கண்காணிக்க சார்க் குழு வருகிறது

உள்ளூராட்சித் தேர்தலைக் கண்காணிக்க சார்க் அமைப்புக்கு ஜனாதிபதி பிரேமதாஸ விடுத்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மற்றும் ஒரு தொகுதியினர் இன்று காலை வந்து சேரவுள்ளனர்.

தேர்தலைக் கண்காணிக்க வென சார்க் கண்காணிப்புக்

## மன்னாரில் மீண்டும் ஊரடங்கு

மன்னார் மாவட்டத்தில் முசலி, நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6 மணி முதல் மறு அறிவித்தல்வரை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிரஞ்சீவி வீரமரணம்

முல்லைத்தீவு இராணுவத்துடனான மோதலில் சிரஞ்சீவி (மனோகரன் புத்தளம்) வீரமரணமடைந்தார். (70)

## பேசாலை முகாமில் கைதான 9 பேர் நிலை தெரியவில்லை

தமிழ்நாடு சனத்தொகை கணிப்பு

## மக்கள் தொகையில் 7 ஆம் இடம் கல்வியறிவு அதிகரிப்பு

இவ்வாண்டு தமிழ் நாட்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின் விவரங்கள் நேற்று சென்னையில் வெளியிடப்பட்டன.

தமிழ் நாட்டின் சனத்தொகை 5 கோடி 56 லட்சத்து 88 ஆயிரத்து 318 ஆகும். இதில் ஆண்களின் தொகை இரண்டு கோடி எண்பத்திரண்டு லட்சம். பெண் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பாலம்போட்டாறு கண்ணியில் ட்ரக் சேதம்; சிப்பாய் பலி

திருமலை மாவட்டம் பாலம்போட்டாறு இராணுவ முகாமில் இருந்து ட்ரக் வண்டியில் வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் கொழும்பு வீதியால் வந்த மேற்படி ட்ரக் மீது முகாமில் இருந்து ஒரு மைல் தொலைவில்இக்கண்ணி வெடி சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் ஒரு சிப்பாய் பலியானதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (70)

[illegible] விடுத்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தலைக்கண்காணிக்கும் குழுவில் இடம்பெறும் நான்கு பாகிஸ்தானியர்கள் நேற்று இரவு வந்துசேர்ந்துள்ளனர்.

[illegible]ளனர்.

தேர்தலைக் கண்காணிக்க வென சார்க் கண்காணிப்புக் குழு இலங்கை வருவது இது மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்குக்கு வந்த லொறிகள் வவுனியாவில் தவம் கிடக்கின்றன

கொழும்பிலிருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ் குடாநாட்டுக்கு வந்த சுமார் 150 லொறிகள் வவுனியா தடை முகாமில் காத்து நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் சுமார் இருபது தொண்டர் நிறுவனங்களின் லொறிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்பட்டனவாம்.

மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு வந்த இல லொறிகளும் அங்கு தரித்து நிற்ப

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவில் தமிழ் அகதிகளுக்கும் நிவாரணத்தில் மோசடி

தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக வெளிநாட்டு அமைப்புக்களினால் வழங்கப்படும் நிதி, மற்றும் உதவிகளில் ஒருகுறிப்பிட்ட சிறு தொகைகளே அகதிகளுக்கு பயன்படுத்தப்படுகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் வடகிழக்குப் பகுதிகளில் இருந்து வெளியேறிய இரண்டு லட்சத்து அறுபதாயிரம் அகதிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியின் ஒரு பகுதியே பயன்படுத்தப்படுகிறது என

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 9 பேர் நிலை தெரியவில்லை

பெப்ரவரி 5 ஆம் திகதி மன்னார் பேசாலை அகதி முகாமில் கைதான இருபது பேரில் ஒன்பது பேரின் நிலை பற்றி எதுவுமே தெரியாதுள்ளதாக மன்னாரில் இருந்து இங்கு திரும்பிய ஒருவர் கூறினார்.

ஏனைய பதினொரு பேரும் இராணுவ முகாமில் பலத்த சித்திரவதையை அனுபவித்து வருவதாகவும் இவர்கள் இது வரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் தெரியவருகிறது

இதற்கு முதலும் மன்னாரில் அறுபது பேர் காணாமல் போயுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (74)

## க. பொ. த விசேட பரீட்சை பொருள்கள் யாழ் வந்தன

யாழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ள க. பொ. த(உ.த) விசேட பரீட்சைக்குரிய எழுது பொருள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இவை சிறுவர் பாதுகாப்பு நிலைய லொறிகள் மூலம் இங்கு வந்து சேர்ந்ததாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

வடக்கு கிழக்கில் இப் பரீட்சை ஏப்ரல் 22 முதல் மே 14ம் திகதிவரை திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அவர்தெரிவித்தார். (74)

## மாணவனுக்கு அரவம் தீண்டியது

அம்பனை தெற்கைச் சேர்ந்த இளைஞரொருவர் பாம்பினால் கடியுண்டு மிக ஆபத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

நேற்றுக்காலை எட்டு மணியளவில் கொழும்பு வீதியால் [illegible]

கொழும்பின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (70)

## கட்டைபறிச்சான் இராணுவம் 7 பொதுமக்களை கொன்றது

திருகோணமலை கட்டைபறிச்சான் இராணுவ முகாம் இராணுவத்தினர் மட்டப்புக்களி, இலக்கந்தை நல்லூர் ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்து ஐந்து பொதுமக்களைச் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவம் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

14ஆம் திகதி கட்டை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு பம்பாய் வெங்காய விதைகள்

யாழ் மாவட்ட விவசாயிகள் குறைந்தளவு விஸ்திரணப் பரப்பில் பம்பாய் வெங்காயச் செய்கை உற்பத்தி செய்வதற்கு யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் கே. குணரத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பம்பாய் வெங்காயப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### நட்டஈடு வழங்குவதற்கு

## 5 கோடி ரூபா தேவைக்கு 50 லட்சம் ரூபாவே யாழ் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இறந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க ஐந்து கோடி ரூபா தேவைக்கு ஐம்பது லட்சம் ரூபா மட்டுமே யாழ் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமாவதற்குமுன்னர் இடம்பெற்ற உயிர் இழப்புகளுக்கே இவ்வளவு தொகை தேவைப்படுவதாக செயற்திட்டப் பணிப்பாளர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மகாபலிபுரம் சிற்பக்கோவில் பகுதியில்
## கடல் விலங்கு கண்காட்சிக் கூடம்

தமிழகம் மகாபலிபுரம் சிற்ப ஆலயத்திற்கு அருகில் டால்பின் கடல்விலங்கு கண்காட்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இந்த கண்காட்சிக் கூடத்தினை அமைத்து பராமரிக்கவுள்ளது.

கடலோரமாக அமைந்துள்ள மகாபலிபுரம் சிற்பக் கோவில் இந்தியாவில் தற்போது உல்லாசப் பயணிகளைக் கவரும் முக்கிய இடமாக மாறிவருகின்றது.

மகாபலிபுர சிற்பங்களை முழுமையாகச் சித்தரிக்கும் வகையில் 'வா ராஜா வா' என்ற தமிழ்த் திரைப்படமொன்று சிலவருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டுத் திரையிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வயது பதினொன்று! கணக்கிலோசூரப்புலி!! விரைவில் உலகசாதனை!!!
# வியப்பிலாழ்த்துகிறார் தமிழீழ மாணவன்

இங்கிலாந்துப் பத்திரிகைகளின் செய்திகளில் அடிக்கடி இடம் பெறும் இந்த மாணவனுக்கு வயது பதினொன்று மட்டுமே. இங்கிலாந்துப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப்படித்து வருபவர்களில் மிக இளவயது மாணவரும் இவரே. கணக்கில் புலியான இவர் எத்தனை சிக்கலான கணக்குகளையும் வினாடியில் தீர்க்கக் கூடியசூரப்புலி! கணக்கிலே புதிய சமன்பாடுகளை உருவாக்கியுள்ள இந்தச்சிறுவர் பிரிட்டிஷ் பல்கலைக் கழகத்தில் கணக்கைச் சிறப்புப்பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றுள்ளார். இரண்டு ஆண்டுகளில் இவர் சிறப்புப்பட்டதாரியாகியும் விடுவார். தன்னைவிட இருமடங்கு வயது மூத்தவர்களுடன் பட்டம் பெற்றுச் சிறுவயதிலேயே பட்டதாரியாகி விரைவில் உலகசாதனையை ஏற்படுத்தப்போகும் இந்தச் சிறுவர் தமிழீழத்தின் வடக்குப் பகுதியைத் தாயகமாகக் கொண்ட கணேஷ் சிற்றம்பலம்என்பவரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**பிரத்தியேக செய்தி**

## தட்டெழுத்தாளர் நேர்முகப்பரீட்சை;
## தெரிவானவடபகுதிவிண்ணப்பதாரர்விவரம்

1990 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தி அடைந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தோரின் பெயர்ப் பட்டியல் வெளியாகி உள்ளது.

கடந்த 24ஆம் திகதி நடந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதோர் இவ்வாரத்திற்குள் பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் திருமதி அசோகாகுணவர்த்தனாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எஸ். சரஸ்வதி, அல்வாய் வடக்கு, த. நந்தினி அளவெட்டி, த. வசந்தி நீர்வேலி. த. மாலினி கரவெட்டி, த. கணேசமூர்த்தி கரவெட்டி, ச. மகாலட்சுமி அரியாலை, க. ராதிகா வல்வெட்டித்துறை. எஸ். திருவருள்செல்வி வண்ணார்பண்ணை, வி. வை. நிர்மலா அரியாலை, எஸ். உதயராணி திருநெல்வேலி, பி. சந்திரராணி யாழ்ப்பாணம், கே. கணேஸ்வரி சங்கானை மேற்கு. ச. சந்திரகுமார் சுச்சேரி, யாழ்ப்பாணம், பி. விஜயலட்சுமி, தொல்புரம், ஆர். இராஜேஸ்வரி கொக்குவில், கே. மலர் அஞ்சனி செட்டடி, த. வசந்தி சுந்தர்மடம், ஆர். இராஜலட்சுமி வல்வெட்டி, எஸ். செல்வமணி தன்னாலை ஆகியோரே நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோர் ஆவர். (ப-10)

## அம்பனில் பனங்கட்டி உற்பத்தி

பருத்தித்துறை தெற்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கம் விரைவில் பனங்கட்டி தொழிற்சாலையை அம்பனில் ஆரம்பிக்கவுள்ளது. (ப-36)

## மந்திகை வைத்தியசாலையில் -புதிய இணைப்புப் பாதை அமைப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பல இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சத்திரசிகிச்சை மாடிக் கட்டிட வார்ட்டை வைத்திய சாலையின் ஏனைய கட்டிடங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய கட்டிடங்களுடன் இவ்வார்ட்டைஇணைப்பதற்கு ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் பாதைக்கான கூரையுடன் கூடிய கட்டிடம் அமைக்க வைத்திய சாலை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இவ்வைத்திய சாலையில் உள்ள சத்திர சிகிச்சைக் கூடத்துக்கென தனியான தண்ணீர்த் தாங்கி ஒன்றும் 30 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது.

இது தவிர வைத்தியசாலையின் கிழக்குப்புற எல்லைக்கு இரண்டு இலட்சம்ரூபாய் செலவில் சுற்றுமதில் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (50)

## வர்த்தகர் சங்க ஒன்று கூடல்

சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் மதியபோசன விருந்தையும், ஒன்றுகூடல் ஒன்றையும் எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடாத்தவுள்ளது.

முதற் தடவையாக நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சி பேதம் எதுவும் இல்லை என்பதை எடுத்துக்காட்டுமுகமாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## பணப்புழக்கம் பாதிப்பு

மாங்குளம், கிளிநொச்சி வங்கிகளில் கடந்த பல மாதங்களாகப் பணக்கொடுக்கல். வாங்கல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வங்கிகளில் பணப்புழக்கம் வெகுவாகக் குறைந்து காணப்படுவதுடன் காசோலை கொடுக்கல், வாங்கலே அதிகம் நடைபெற்று

## கண்டி சாகித்திய விழாவில் மூன்று தமிழர்களுக்கு கௌரவம்

இம்மாத இறுதியில் கண்டியில் நடைபெறவுள்ளசாகித்திய விழாவில் மூன்று தமிழர்கள் உட்பட நால்வர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மு முத்தையா(யாழ்ப்பாணம்) கே. கணேஷ்(மலையகம்) எப் எக்ஸ். சி. நடராஜா (மட்டக்களப்பு) ஆகியமூவரே கௌரவிக்கப்படவுள்ள தமிழர்களாவர்.

இதே வேளை சாகித்திய விழாவை முன்னிட்டு கண்டியில் ஏட்டுச்சுவடிகள் ஊர்வலம் ஒன்றும் இடம் பெறவுள்ளது. (34)

### ஜொனிக்கு அஞ்சலி

மன்னார் இலாவத்துறையில் வீரமரணமடைந்த புலோலி தெற்குபுற்றளையைச் சேர்ந்த லெப். ஜொனி (சத்தியவான் சக்திவேல்) யின் இறுதி அஞ்சலி சனிக்கிழமை வடமராட்சியில் இடம்பெற்றது.

பெருந்தொகையான பொது மக்களும் மாணவர்களும் மாவீரர் ஜொனிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். (15)

## புதுக்குடியிருப்பில் வடிசாலை

தென்னை பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் முதலீட்டில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடிசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது

இந்த வடிசாலையில் சீனியை உற்பத்தி செய்துவரும் கழிவுப் பாகிலிருந்து மதுசாரம். வடிக்கப்படவுள்ளது. (83)

## மெய்யியல் கழக நிருவாகிகள்

யாழ் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் கழகத்திற்கான நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக இறுதி வருட

## அம்பன் பிள்ளையார் பஞ்சாயத்து சபை

அம்பன் பிள்ளையார் கோவில் வருடாந்த பஞ்சாயத்து சபைக் கூட்டம் ஏப்ரல் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ப-36)


# கண்ணீர் அஞ்சலி

எங்கள் பனை அபிவிருத்திப் பணியில்
பக்கபலமாக நின்று தளராது உழைத்த

அமரர்
கலாநிதி பேராசிரியர் சோ. சந்தையா
அவர்களுக்கு
எங்கள்
கண்ணீர் அஞ்சலி

- மில்க்வைற்

03124


## புலியின் தனிக்குணம்!

தமிழீழத்தின் தேசிய சின்னமாகப் புலி இலச்சினையைத் தலைவர் பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள் சிலவற்றை (22. 3. 91- முரசொலி) தறித்திருந்தீர்கள்.

இவற்றுள் எல்லாம் மிகச் சிறப்பானதொரு குணம் புலியிடமுண்டு. அது தமிழ் இனத்தின் இரத்தத்தில் ஊறிய குணம். அதனாலேயே அது புலவர் பாடும் புகழ்பெற்றது

அது என்ன தெரியுமா? புலியிடமுள்ள மான உணர்வு! புலி தான் கொல்லாத உணவை ஒருபோதும் உண்ணாது. இதனைத் தான், "புலி பசித்தாலும் புல்லைத்

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 08



உதிர்வு: 06 — 04

[illegible]
தில்லாது" என்றார்கள். இதனைத் தான்; 'தான் தந்தது உண்ணல்' என்றான் வள்ளுவன். எல்லாம் இன வசமாகப் பெற விரும்பும் நமக்கு இதெல்லாம் ஒத்து வராததுதான்.

புலி தன் இரை மீது பாயும் போது அந்த இரை எவ்வளவு பலம் குறைந்த மிருகமானாலும் தற்காப்புக்காகப் போராடவே செய்யும். அந்தப் போரில் அந்த இரை புலியின் இடப்பக்கம் வீழ்ந்து இறந்து கிடந்தால் அது தன்மானத்துக்கு இழுக்கு என எண்ணி கடும் பசியாயினும் உண்ணாது அன்று முழுவதும் தன் மானக் கழிவிற்கு வருந்தி, பட்டினி கிடந்து, அடுத்த நாள் தான் வாழும் காடு நடுங்கக் கர்ச்சித்து வலிய யானையை வலப்பக்கம் வீழ்த்தி உண்ணும். அத்தகைய மான உணர்வு உடையது புலி. இதனை,

''கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலி... ......''

(புறம் - 190) இல் காணலாகும்.

இதனாலேதான் மானம் மனித உயர்குணங்களுள் ஒன்று என வைத்தார் வள்ளுவர். மானம் என்னும் சொல்லுக்கு விளக்கம் கூறிய பரிமேலழகர்

''எஞ்ஞான்றும் தன் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்'' என்றார்.

புலி எஞ்ஞான்றும் தன்னிலையில் தாழாது. அது தன்னால் அன்றிக் கொல்லப்பட்டதை உண்ணாது! ஏன் இடம் (இடப்பக்கம்) வீழ்ந்ததைக்கூட உண்ணாது!.

— வித்துவான் கலாநிதி க. ந. வேலன்

மேலும் அதிகம் நடைபெற்று வருகிறது. (38)

## சிறு விளம்பரம்

### சேவை

புளொக் (Block) புகைப்படம், றபர் சீல், கலர் படம், ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள், விரிக்கேவி முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

03121

தலைவராக இறுதி வருட மெய்யியல் துறை மாணவன் அ. யூட் அஞ்சலோ தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராக செல்வி பவானி, செயலாளராக செல்வி சிவலோஜினி, இளம் பொருளாளராக அன்ரன் டயஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேற்படி கழகத்தின் போஷகராக துறைத்தலைவர் கலாநிதி சோ கிருஷ்ணராஜாவும் பெரும் பொருளாளராக கலாநிதி ஞானகுமாரனும் கடமையாற்றுகிறார்கள்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டிக் கிரியையும்
## அமரர் கேதாரகௌரி லோகநாதன்

பிறப்பு : 20. 10. 68 இறப்பு : 27. 12. 90

அன்புக்கினிய எம் அம்மா உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

கணவன் செ. லோகநாதன்
மகன் சுஜீவன்

03123

08 — 1912



04 — 1990

## அமரர்
## அருணாசலம் வேலுப்பிள்ளை
(முன்னாள் இ. போ. ச. ஊழியர்)

### திதி : 27 - 03 - 1991

ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

அன்பின் திருவுருவாய் அறிவின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து மறைந்து
ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை. பசுமை நிறைந்த அந்த நினைவுகள் காலத்தால் அழியாது.

தங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

வடலியடைப்பு,
(சங்கானை மேற்கு)
பண்டத்தரிப்பு.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை மற்றும்
உறவினர், நண்பர்கள்.

03122

★ எல்லைப்புறக் குடியேற்றப் பகுதிகளில் கடமைபுரியும்

# சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்களுக்கே கஷ்டப்பிரதேச விசேட சம்பளப்படி!

கஷ்டப் பிரதேசங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவு வடக்கு, கிழக்கின் எல்லையில் அமைந்துள்ள சிங்கள, முஸ்லிம் குடியேற்றக் கிராமங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கே வழங்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இந்த விசேட கொடுப்பனவு ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட பகுதி பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது.

அடுத்த கட்டமாக பொலநறுவை மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

## வகுப்பறையும் 'பார்' ஆகிறது
### கொழும்பு மாணவர்போதையில் கலாட்டா

கொழும்பில் தற்பொழுது பிரபல கல்லூரிகளுக் கிடையே நடைபெற்று வரும் கிரிக்கட் போட்டிகளில், கல்லூரி மாணவர்கள் மதுபோதையில் அட்டகாசம் செய்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்களிடம் பணம் சேகரிக்கும் இவர்கள் வகுப்பறைகளில் வைத்து மது அருந்திவிட்டு வீதிகளில் கலாட்டா செய்கின்றனராம்.

கல்லூரி கிரிக்கட் போட்டிகள் நடைபெறும் வேளைகளின் போது மதுபோதையில் வரும் மாணவர்கள் மைதானத்தில் அட்டகாசம் செய்வதுடன், வீதிகளில் செல்லும் யுவதிகளுடன் சேஷ்டை செய்து, வாகனங்களை சேதப்படுத்துவதாகவும் பரவலாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் றோயல் கல்லூரிக்கும், சென் தோமஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியின்போது மது அருந்திய நண்பர்களுடன் சென்ற றோயல் கல்லூரி மாணவர் தலைவன் கீர்த்தி அபய சேகர மர்மமான முறையில் மரணமாகியிருந்தது தெரிந்ததே.

கல்லூரி கிரிக்கட் போட்டிகளின் போது மாணவர்கள் மது அருந்தி அட்டகாசம் புரிவதை உடன் தடுக்க கல்லூரி அதிபர்களும், ஆசிரியர்களும் முன்வர வேண்டுமென பௌத்த இளைஞர் சங்க வெளியீடான 'புட்டிஷ்' என்ற சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

## ஹேபியர் நினைவாக கூடைப் பந்தாட்டம்

மறைந்த கத்தோலிக்கக் குரு அருட் திரு. ஹேபியர் அடிகளாரின் நினைவாக அகில இலங்கைக் கழக ரீதியிலான கூடைப்பந்தாட்டப் போட்டியொன்றை வர்த்தக கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தி வருகின்றது.

கடந்த 25 ஆம் திகதி கொழும்பு சுகததாச அரங்கில் ஆரம்பமான வர்த்தக ஸ்தாபனங்களுக்கிடையேயான இப் போட்டி ஏப்ரல் 29 ஆம் திகதி வரை நடைபெறும்.

அரை இறுதி ஆட்டங்கள் அடுத்த மாதம் 30 ஆம் திகதிமுதல் மே 4 ஆம் திகதி வரை பொலிஸ் திடலில் நடைபெறவுள்ளது.

ஒல்லாந்து நாட்டவரான அருட்திரு ஹேபியர் அடிகளார் இழக்கில் கூடைப் பந்தாட்டத்தை அறிமுகப் படுத்தித் தலைசிறந்த வீரர்களை உருவாக்கியவர்.

கடந்த ஜூலை மாதம் மட்டக்களப்பில் வைத்து இவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் பின்னர் மரணமாகியிருந்தார்.

## ஸ்ரீ சச்சிதானந்தா குருபூசை

திருகோணமலை சிவானந்த தபோவனத்தைத் தாபித்த ஸ்ரீ சிவானந்த சச்சிதானந்த மாதாஜியின் குருபூசை ஏப்ரல் மாதம் முதலாந் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 1990 நவம்பர் முதல் 300 ரூபா விசேடபடி!

சகல பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும், பயிலுநர் ஆசிரியர்களைப் போல் 300 ரூபா விசேட படி வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

1990 நவம்பர் மாதம் முதல் இந்த விசேடபடி பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கு 1750 ரூபா படியாக வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்கள் இவ் வருடம் ஜனவரிமாதம் முதல் 150 ரூபா மேலதிக படியையும் பெற்றுவருகிறார்கள்.

இப் புதிய அறிவிப்பின்படி சகல பட்டதாரிப் பயிலுநர்களும் இனி மொத்தமாக மாதாந்தம் 2050 ரூபாவைப் படியாகப் பெறுவர்.

## க.பொ.த. சாதாரணதர விசேட பரீட்சை வட-கிழக்கில் ஆகஸ்ட்டில் நடைபெறும்

வடக்கு கிழக்குப் பகுதியில் விசேட க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடாத்தப் படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இப் பரீட்சை ஏனைய

## இந்தியசனத்தொகை 84கோடியை கடந்தது

(நேற்றைய தொடர்ச்சி)

# தமிழீழத்தில் இந்திய ஊடுருவல்

### திருமலையில் கண்

இயற்கையாக அமையப் பெற்றதும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான திருமலைத் துறைமுகம் மீது உலக வல்லரசுகள் நீண்ட காலமாகக் கண்வைத்து வந்தன. இப்பிரதேசத்தில் உலக வல்லரசுகளின் ஊடுருவல்களை விரும்பாத இந்திய ஏகாதிபத்தியம் திருமலைத் துறைமுகத்தைத் தனது கடலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரத் திட்டமிட்டது. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் திருமலைத் துறைமுக எண்ணெய்க்குதங்களை திருத்தியமைக்கும் பொறுப்பை இந்தியா தனதாக்கிக்கொண்டது. இந்த எண்ணெய்க்குதங்கள் திருத்தியமைக்கப்பட்டதும் துறைமுக எண்ணெய் வசதிகளைப் பயன்படுத்தப்போவது இந்திய கடற்படையன்றி வேறு யாருமல்ல. அந்தச் சூழ்நிலையில் திருமலைத்துறைமுகம் இந்தியாவின் தென்பிராந்திய கடற்தளமாக மாறிவிடும் பேராபத்து ஏற்படப் போகிறது. இதனாலேதான் இந்த ஒப்பந்த விதிக்கு தென்னிலங்கையில் எதிர்ப்புக் கிளம்பியது.

### பிரேமாவின் பிறழ்வு

இலங்கையின் இறைமையை இந்தியாவுக்கு விற்றுவிட்ட ஒரு தேசத்துரோகி என ஜெயவர்த்தனா மீது ஜே.வி.பி. இயக்கம் குற்றம் சாட்டியது. பிரேமதாசா ஆட்சியேறியபோது இந்த ஒப்பந்த விதி நீக்கப்பட வேண்டும் இலங்கையின் இறைமையைப் பாதிக்காத புதிய நட்புறவு ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் என வலியுறுத்திவந்தார். ஆனால் இப்பொழுது அவரது நிலைப்பாடு மாறியிருக்கிறது. திருகோணமலைப் பிரதேசத்தை சிங்களமயமாக்கி, வடக்கையும், கிழக்கையும் பூகோளரீதியில் துண்டித்துவிடுவது சிங்கள அரசின் திட்டம். தமிழரின் பிரதேச ஆட்சியுரிமையின் கீழ் திருமலை கொண்டுவரக்கூடாதென்பதும், அது தமிழீழத்தின் தலைநகராகமாறக் கூடாது என்பதும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் நீண்டகால அபிலாசை. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுவதாயின் இந்தியாவின் ஆசிதேவை. இந்தியாவின் கேந்திர அபிலாஷைகளுக்கு விட்டுக் கொடுத்தால் தமிழர் தாயகத்தைக் கூறுபோட்டுச்சிதைப்பதற்கு இந்தியா ஆட்சேபிக்காது, எனவேதான் இந்திய-இலங்கை ஒப்பந்த விதிகளை நடைமுறைசெய்யப் பிரேமதாச அரசு இணங்கியிருக்கிறது.

### மன்னார் எண்ணெய் வளம்

மன்னார் கடற் பிரதேசத்திலுள்ள எண்ணெய் வளம் தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இப்பிரதேசத்தில் முன்பு ரஷ்ய கடல்வள நிபுணர்கள் ஆராய்ச்சிகளை நடாத்தி எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். எனினும் சிங்கள அரசு நீண்டகாலமாக இதுபற்றி மௌனம் சாதித்துவந்தது. இப்பொழுது இந்தியாவின் உதவியுடன் மன்னார்க் கடலில் எண்ணெயைத் தோண்டி எடுத்து அதைப் பகிர்ந்துகொள்ள சிங்கள அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் தமிழீழ மக்களுக்கு உரித்தான செல்வம் இந்திய, சிங்கள முதலாளி வர்க்கத்தால் சூறையாடப்படும், எண்ணெய்வளம் பறிபோவதோடு சுற்றுசூழல், உயிரின வாழ்வும் சிதைக்கப்படும். இந்த நாசகாரத்திட்டத்தை தமிழீழ மக்கள் அனுமதிக்கக்கூடாது.

### இந்திய ஊடுருவல்

இன்றைய இந்தியத் தலையீட்டின் அந்தரங்க நோக்கங்களும் குறிக்கோள்களும் தமிழீழ மக்களின் தேசிய நலனுக்கு பாதகமானவை. எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு விரோதமானவை. எமது தாயகத்தின் மீதுள்ள எமது பிரதேச ஆட்சியுரிமைக்குக் குந்தகமானவை. புதிய பரிமாணத்தில் வரும் இந்திய ஏகாதிபத்தியத்தின் ஊடுருவல்களை எமது மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இந்தியா பற்றிய மருட்சியிலிருந்து விடுபட்டு புரட்சிகரமான விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம். (முற்றும்)

---

யுத்த நிறுத்தத்தை இலங்கைஅரசு கைவிட முடிவு செய்ததும், விமானப் படை முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மூர்க்கத்தனமாக- பொதுமக்களையும், பொது ஸ்தாபனங்களையும் குறிவைத்துத் தாக்கத் தொடங்கியது. வல்வெட்டித்துறையை ஈவிரக்கமின்றித் தாக்கி அழித்தது.இத்தாக்குதலின்பின் யாழ்ப்பாணம் வந்த தோமஸ் ஏபிரஹாம் Frontline இல் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

# இது புலிகளுக்கெதிரான யுத்தமல்ல தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம்

தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசு எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகள், யுத்த நிறுத்தம் முடிவுற்றதும் மிகவும் தீவிரமடைந்துள்ளன. இலங்கை விமானப்படை அழிவுப்பாதையில் இறங்கியுள்ளது. விமானப் படை வேண்டுமென்றே திட்டமிட்டுப் பாடசாலைகளையும், கோவில்களையும், அகதி முகாம்களையும், சந்தைகளையும் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளது. எவ்வளவு தூரம் பொதுமக்களைக் கொல்லமுடியுமோ, அவ்வளவு கொன்று குவிப்பதே விமானப்படையின் பாடசாலைகளிலும் வீசப்பட்டிருந்தன. அங்குள்ள தளபாடங்கள் எரிந்து இருந்தன. அதிர்ஷ்டவசமாக அன்று அங்கு மாணவர்கள் இருக்கவில்லை.

பாடசாலைக் கட்டிடங்களும், கோயில்களும் வானில் இருந்து பார்க்கும்போது தெளிவாகத் தெரியும், இவற்றை எல்.ரி.ரி.ஈ. யின் முகாம் என்று தப்புக்கணக்குப்போட முடியாது. எல்.ரி.ரி.ஈ. இன் இலக்குகளைக் குறிவைக்கும் போது தவறுதலாக இவை நிகழ்கின்றன எனச் சாக்குப்போக்குக் கூற முடியாது.

## இந்தியசனத்தொகை 84கோடியை கடந்தது 63.8 சதவீதத்தினர் ஆண்களாவர்

இந்தியாவின் சனத்தொகை எண்பத்து நான்கு கோடியைத்தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் அங்கு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரக்கணக்கெடுப்பின் மூலம் இது தெரிய வந்துள்ளது.

1981 ஆம் ஆண்டு அங்கு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் சனத்தொகை வளர்ச்சிவீதம் 1.16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சனத்தொகையில் 63.8 சதவீதத்தினர் ஆண்களாவர்,

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இப்பரீட்சை ஏனைய பகுதிகளில் நடாத்தப்பட்டு, விரைவில் அவற்றின் பெறுபேறுகளும் வெளியிடப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## கட்டுப்பாடு வெற்றியளித்தது அம்பனில் காட்டுவளம் செழிக்கிறது

அம்பன் பகுதியில் தற்போது காட்டுவளம் பெருகி வருகிறது.

1989 முதல் காட்டு வளத்தை அழிப்பதற்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து காட்டுவளம் பெருகி வருகிறது.

தொடர்ந்தும் காட்டு வளத்தை பாதுகாப்பதற்கு இங்குள்ள பல சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

(ப.36)

## துணுக்காய், பாண்டியன்குள பகுதி அரச ஊழியர்க்கு

## விவசாயக்காணி, வீடு, இலகுகடன் கிடைக்கும்!

துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமை புரிய முன்வரும் உத்தியோகத்தர்களுக்கு அரசின் புதிய திட்டத்திற்கமைய பல சலுகைகள் கிடைக்கவுள்ளன.

மேற்படி பகுதிகளில் பணிபுரிய வரும் உத்தியோகத்தர்களுக்கு வீடு, விவசாயக் காணி ஆகியவற்றுடன் இலகு கடனும் கிடைக்கவுள்ளது.

அரசாங்கம் தெரிவு செய்த ஒன்பது மாகாணங்களில் இருபத்தைந்து பிரிவுகளில் மேற்படி பிரிவுகளும் அடங்குகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (38)

பொதுமக்களைக் கொல்லமுடியுமோ, அவ்வளவு கொன்று குவிப்பதே விமானப்படையின் குறிக்கோள் என்பது அவர்கள் தாக்குதல்களை நடத்திய விதத்திலிருந்து தெரிய வருகின்றது. போர் ஆரம்பித்த காலம் தொடங்கி இதற்குமுன் இப்படியான கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம் பெறவில்லையென யாழ்ப்பாண மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

### வல்வைக் கொடூரம்

வல்வெட்டித்துறை நகரம் மூன்று நாட்களாகத் தொடர்ச்சியாக வான் தாக்குதல்களுக்குள்ளானது. அங்குள்ள கோவில்கள், பாடசாலைகள், வீடுகள் யாவும் தரைமட்டமாகின. வல்வெட்டித்துறை இடிந்த கட்டிடங்களாகவும், கற்குவியல்களாகவும் காட்சி அளிக்கின்றது.

நகரத்திற்கு வெளியே இருந்த எல்.ரி.ரி.ஈ முகாம் எவ்வித பாதிப்பும் இன்றி இருந்தது.

இத் தாக்குதல்களை ஒப்புக் கொண்ட அரசு, எல்.ரி.ரி.ஈ. வள்ளங்களில் வந்து இறங்கும் இடங்களையே தாக்கியதாகத் தமது தாக்குதல்களுக்கு நியாயம் கற்பித்தது. ஆனால், அவ்விடத்திற்குப் போய்ப்பார்த்த போது, மக்களை அழிப்பதற்குத் திட்டமிட்டுச் செய்த வான் தாக்குதல்கள் அவை என்பது புலனாகியது.

விமானப்படையின் தாக்குதல்கள் மிகவும் கொடூரமானவை என்பதை நேரில் பார்த்தபோது புலனாகியது. பீப்பாய்க் குண்டுகளும், நேபாம் குண்டுகளும் கண்மூடித்தனமாக வீசப்பட்டிருந்தன. இந்தக் குண்டுகள்

வைக்கும் போது தவறுதலாக இவை நிகழ்கின்றன எனச் சாக்குப்போக்குக் கூற முடியாது. பாடசாலைகளும், கோயில்களும், பொதுஸ்தாபனங்களும குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை.

இந்த நாலு நாள் தாக்குதலில் 101 வீடுகள் தரைமட்டமாயின. 451 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. 10 பொதுமக்கள் கொல்லப்பட்டு, 20 பேர் காயமடைந்தனர் எல். ரி. ரி. ஈ. இன் முக்கிய தலைவர்களான பிரபாகரன், மாத்தயா, கிட்டு மூவரும். வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள யாவரும் எல்.ரி.ரி.ஈக்கு ஆதரவானவர்கள். இவற்றைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் வஞ்சம் தீர்க்கும் முகமாக இக்கோரத் தாக்குதலைத் திட்டமிட்டுச் செய்தது என மக்கள் கருதுகின்றார்கள்.

### புதுக்குடியிருப்பில் குண்டுவீச்சு

இத்தாக்குதல், விமானப் படையினால் தொடர்ச்சியாகப் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒன்று. முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்த புதுக்குடியிருப்புக் கிராமத்தில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குழுமியிருந்த சந்தையின் மேல் மிகத் தாழ்வாகப் பறந்து நாலு குண்டுகளை வீசின. இருபத்து மூன்று பொது மக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பதின்மூன்று பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடைபெற்றபோது அங்கு எல். ரி. ரி. ஈ. போராளிகள் எவரும் இருக்கவில்லை. பொதுமக்களை இலக்கு வைத்தே குண்டுகள் வீசப்பட்டன.

(தொடரும்)

# இடைக்கால உணவுப்படி வழங்கப்படவில்லை

காங்கேசன்துறை பிரதேச சபையிலிருந்து சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஏழு உத்தியோகத்தர்களுக்கும் இன்றுவரை இடைக்கால உணவுப்படி வழங்கப்படவில்லை.

ஒய்வு பெற்ற அடுத்த மாதமே வழங்கப்படவேண்டிய இவ் இடைக்கால உணவுப்படி இவ் ஊழியர்களுக்கு கடந்த ஜனவரியிலிருந்து இன்று வரை வழங்கப்படவில்லை என்றும் இதனால் இவ் உத்தியோகத்தர்கள் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# வெளிவாரிப் பட்டப்படிப்பு துணைவேந்தரிடம் கோரிக்கை

வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூலம் விரிவுரைகளை வழங்கவும், பட்டப்பரீட்சைக்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பயிலுநர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு கே. ஸ்ரீசந்திரசீலனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள பலர் க. பொ. த (உயர்) தரப் பரீட்சையில் சித்தியடைந்து தமது தகுதிக்கேற்ப வெளிவாரிப்பட்டப்படிப்பை தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

அங்கே இவர்களுக்கு போதனைகள் போதியதாக இல்லாததுடன் கூடியபணச்செலவும் ஏற்படுகின்றது. (15)

# செயலக நடவடிக்கைக்கு 130 மில்லியன் ரூபா வந்தது

யாழ் செயலக நடவடிக்கைகளுக்காக 130மில்லியன் ரூபா கட்டுநிதி கிடைத்துள்ளது.

ஒய்வூதியக் கொடுப்பனவுகள் உட்பட பல்வேறு செலவினங்களை உடனடியாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியால் இம்மாதத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலும் 35 மில்லியன் ரூபா இம்மாத இறுதிக்குள் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (66)

# மதிய உணவு முத்திரைக்கு தெற்கில் சத்துள்ள பொருள்

வடபகுதியில் உள்ள சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு முத்திரைத்திட்டத்தில் ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்களுடன் இனிப்புப் பண்டங்கள், சொப்பிகள் பென்சில்களும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தென்பகுதிப் பாடசாலைகளில் மாணவர்களின் உணவு முத்திரைத் திட்டத்திற்கு உடல் உளநலத்திற்கு சத்துள்ள தானியவகைகள் வழங்கப்படுகின்றன.

வடபகுதியில் உள்ள பெற்றோர் பாடசாலை மதிய உணவு முத்திரைத் திட்டத்திற்கு மண்ணெண்ணெய் வழங்கும்படி அரசாங்க அதிபரைக்கேட்டுள்ளனர். (ப-1)

### வடக்குக்கு...

தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை இன்னும் இரண்டொரு தினங்களில் வந்து சேருமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ப 35, 33)

### யாழ் மாவட்ட—

யாழ் செயலகத்தில் இப்பிரிவில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களை கொழும்புக்கு அனுப்பி கம்பியூட்டர் மூலம் இவ்வேலைகளைச் செய்வதற்கு பயிற்சி

## ஒய்வு பெற்றவர்களை

# நாடு கடத்தப்பட்ட கசினோ மன்னர் ஜோசிம்

# தரமுயன்ற 'செக்'ஐ ஏற்க ஜனாதிபதி மறுப்பு!

நாடுகடத்தப்பட்ட கசினோ மன்னரான ஜோசிம் பற்றி வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

33 வயதான சிங்கப்பூர் பிரஜையான இவர் பதினொரு வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு இரத்தினக்கல் வியாபாரமாக வந்தாராம்.

இங்கு இவர் இருந்த காலத்தில் 'ட்ரீபோன் குறூப்' கம்பனிக் ரெஸ்ரோரன்டுகளை நிறுவியதுடன் சூதாச் செட்டை ஏற்றுமதியிலும், கசினோக்களை (கலியாட்டம்) நிர்வகிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்.

நாடு கடத்தப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு நிதி திரட்டுவது சம்பந்தமாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவர் கலந்து கொள்ள வந்திருந்தார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு பெரும் தொகையை காசோலையாக ஜனாதிபதியிடம் கையளிக்க காத்திருந்தார்.

அப்பொழுது உள்ளே நுழைந்த ஜனாதிபதி பிரேமதாஸ "தகாத வழிகளில் பணம் சம்பாதிப்பவர்களை இங்கு அழைத்து வர வேண்டாம்" என கோபமாக அதிகாரிகளிடம் கூறி ஜோசிமைச் சந்திக்க மறுத்து விட்டார்.

அண்மையில் கொழும்பு மாநகர சபையின் 125 வது ஆண்டு நிறைவு விழாவுக்கு சிங்கப்பூர் பிரதமர் லீபெங் பங்கு பற்றிய போது சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக ஜோசிம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜோசிம் தனது கசினோக்களுக்கு விஜயம் செய்யும் போது அவரது மெய்க்காவலர்கள் அக்கட்டடத்தை சோதனையிடுவது வழக்கம்.

இவருடைய மெய்க்காவலர் சேவையில் இளைப்பாறிய படையினர் இருந்தார்களா? அவர்கள் அனுமதி பெறாத துப்பாக்கிகளை வைத்திருந்தார்களா என்பது குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

இவர் கைது செய்யப்பட்டபோது தமக்கு கைவிலங்கு போடவேண்டாம் என்றும் தனது காரிலேயே விமான நிலையம் போக அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இவரை நாடு கடத்துவதில் முக்கிய பங்கெடுத்தவர் அப்போதைய பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சரின் கொலை தொடர்பாக ஜோசிம் மீதும் சந்தேகம் விழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியர் மறைவுக்கு மறுமலர்ச்சிக்கழகம்

# விவசாயபீடம் ஆரம்பிக்க முயற்சி எடுத்தவர் கந்தையா

யாழ் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்தினை ஆரம்பிக்க சிங்கள அரசு விரும்பாது தட்டிக்கழித்தபோது, பெரும் முயற்சி எடுத்து அப்பீடத்தை ஆரம்பித்து அப்பீடத்தின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டவர் பேராசிரியர் சோ.கந்தையா ஆவர்.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக விவசாய பீடாதிபதியின் மறைவு குறித்து மறுமலர்ச்சிக் கழகம் விடுத்த அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சூழ்நிலையைக் காட்டி தமக்கேற்ற வாய்ப்பு இங்கில்லை என்று வெளிநாடு சென்ற புத்திஜீவிகளின் பட்டியலில் பேராசிரியர் இடம் பெறவில்லை என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கப்பாளம் கடத்தல்

சிங்கப்பூரில் இருந்து நூறு தங்கப்பாளங்களை கடத்தி வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அகப்பட்டார். விசாரணை நடைபெறுகிறது. (74)

## கைலாசநாதர் தேர்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கைலாசநாதப் (சிவன்) பெருமானின் தேர்த் திருவிழா நாளை காலை நடைபெறவுள்ளது.

காலை 7 30 மணிக்கு வசந்தமண்டப பூசையும், 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நிகழும். 10 30 மணிக்கு ரதத்திலிருந்து பெருமான் அவரோகணித்தபின் விசேட

## ஆயுதத்தை கைவிட்டுவருமாறு

# ஜனாதிபதியின் அழைப்பை விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

ஆயுதங்களை கைவிட்டு மாகாணசபைக்கான புதிய தேர்தல்களில் பங்குபற்றுமாறு ஜனாதிபதி பிரேமதாஸ விடுத்த அழைப்பை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

சுயநிர்ணயம் மூலம் பிரச்சனைக்கு தீர்வுகாண முன்வராத ஸ்ரீலங்கா அரசு நடைமுறை சாத்தியமற்ற நிபந்தனைகளை விடுக்கிறது என புலிகள் பிரமுகர் லோரன்ஸ் திலகர் கூறியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

### வடக்கு—

இந்த இருநாள் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

ஏப்பிரல் 22 இல் இருந்து மே 15 வரை நடைபெறவுள்ள க. பொ. த உயர்தர பரீட்சைக்கு இந்த யுத்த நிறுத்தம் அனுசரணையாக இருக்கும் எனவும் இந்நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (74)

### யாழ்...

தவறுவதால் இத்திணைக்களங்களுக்கு தேவையான நிதிபற்றியோ மற்றும் தேவைகள் பற்றியோ அறிய முடியாதுள்ளதாகவும் செயலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான அலுவலகங்களை யாழ் செயலக கட்டிடத்திலுள்ள சில பிரிவுகளுக்கு மாற்றி இவற்றை செயற்படவைப்பது பற்றியும் ஆலோசிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. (66

### கப்பலில்...

ஒருவர் சென்றார். 'மெடிக்கல் ரீம்' ஐச் சேர்ந்த ஒருவர் அவரைக் 'கைக்குள் போட்டு.' தமது மகளை நோயாளியின் மகள் என்று பதிவு செய்து கூட்டிச் சென்றாராம்!

### 5 கோடி...

திரு எம். பத்மநாதன் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற 50 லட்சம் ரூபா நிதி இவ்வாறு பாதிப்படைந்த சுமார் 100 பேருக்கு மட்டுமே வழங்கக்கூடியதாகவுள்ளதாகவும் ஏனையவர்களின் கொடுப்பனவுகளும் ஆயத்தமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (66)

### யாழ் மாவட்ட அரசு...

பயிரை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் திருநெல்வேலியில் உள்ள உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் வேலை நாட்களில் பம்பாய் வெங்காய விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (33)

### கட்டைபறிச்சான்...

பறிச்சான் இராணுவத்தினர் மட்டப்புக்களி கடற்கரையில் இரண்டு பொது மக்களைச் சுட்டுக்கொன்றனர்.

இவ் இரு சம்பவத்திலும் கொல்லப்பட்டவர்களில் வயோதிபர்கள் உட்பட நான்கு பெண்களும் அடங்குவர். (70)

### கொழும்புத்

தாய்வானுக்குச் செல்லும் வழியில் எரிபொருள் நிரப்ப கொழும்புத் துறைமுகத்தை

கொழும்புக்கு அனுப்பி கம்பியூட்டர் மூலம் இவ்வேலைகளைச் செய்வதற்கு பயிற்சி அளிப்பதுடன் இது தொடர்பான மற்றும் வேலைகளையும் பயில்வது பற்றியும் தற்போது ஆராயப்படுகிறது

இங்குள்ள ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இவ்வேலையை மேற்கொள்வதற்கு மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகளுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்க பணிப்பாளர் இணங்கியுள்ளதாகவும் கணக்காளர் தெரிவித்தார். (66)

## ஓய்வு பெற்றவர்களை
# வேலைக்கு அமர்த்த புதிய விதிமுறைகள்

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறியதை யடுத்து ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்ப ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களில் குறிப்பிட்ட தொகையினரே மீண்டும் வேலைக்கமர்த்த பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபங்கள் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இச்சுற்று நிருபத்தின் படி தொழில் நுட்பவியலாளர்கள், ஆங்கில விஞ்ஞான கணித ஆசிரியர்கள், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் ஆகியோர்களையே மீண்டும் வேலைக்கு அமர்த்தலாம்.

அவ்வாறு சேருபவர்கள் முன்பு எந்தப் பதவியில் இருந்தாரோ அதே பதவியிலேயே அமர்த்தப்படவேண்டும் வேறு பதவி வழங்கப்படக்கூடாது


## இடமாற்றம்

டாக்டர் G. குமரேந்திரன் அவர்களின் மருத்துவமனை தற்போது 189, ஒருசோல்ற் வீதியில் (பெரிய மாதா கோவிலுக்கு அண்மையில்) கண்டுக்குளியில் இயங்குகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

டாக்டர் G. குமரேந்திரன்

03116



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 27 - 03 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


### மாணவனுக்கு...

தன நிலையில் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராயப்பு அன்ரனி என்ற இந்த மாணவன் இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளார். (15)

வும் நிகழும். 10 30 மணிக்கு ரதத்திலிருந்து பெருமான் அவரோகணித்தபின் விசேட பூசைகள் நடைபெறும்.

29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசையின் பின்னர் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியிலிருந்து 5 மணிவரை திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றபின் பூந்தண்டிகையில் பெருமான் திருவீதி உலாவருவார்.

### இந்தியாவில்...

வும் மிகுதி அங்குள்ள அதிகாரிகளால் மோசடி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசு கலைக்கப்பட்ட பின்னர் ஈழத் தமிழ் அகதிகளுக்கு போதியளவு உணவு மற்றும் நீர், சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை எனவும் மத்திய அரசு அதிகாரிகளே அகதிகளை மேற்பார்வை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளை அடிக்கடி தமிழகப் பொலிஸார் கைது செய்யும் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகிறது. (ப-11)

பதிவு செய்து கூட்டிச் சென்றாராம்!

மஹரகமவில் அப்பெண் அனுமதிக்கப்பட்ட கையோடு 'மனை' மாயமாகிவிடவே, சிங்களமும் தெரியாது, செய்வதறியாது தவித்தாராம் அப்பெண் நோயாளி!

அதே வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த தம் தாயாரைப் பராமரித்துக் கொண்டிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பரிதாபத்தைப் பார்த்து பணிவிடை செய்தாராம்!

### ஆறாம்...

ணப்பித்த பெற்றோர்களுக்கு இக்கல்லூரி அதிபரினால் இவ்வாறு உறுதிமொழி வழங்கவேண்டும் எனக் கேட்கப்பட்டதாக இவர்கள் முரசொலிக்குத் தெரிவித்தனர்.

காலத்துக்குக் காலம் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அரச ஊழியர்களின் பிள்ளைகளை இந்நிபந்தனைக்கு இணங்கி எவ்வாறு சேர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் அதிபரிடம் தெரிவித்த போதும் அவர் அந்த நிபந்தனையையே விதிக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (96)

தாய்வானுக்குச் செல்லும் வழியில் எரிபொருள் நிரப்ப கொழும்புத் துறைமுகத்தை யடைந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றது.

இப்பீரங்கிக் குண்டுகள் யாரால், எவருக்கு அனுப்பப்பட்டுள்ளதென்பதைப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்

கப்பல் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கப்பல் கப்டன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

கப்பலில் ஏற்றியிருந்த பொருள் பற்றிய விபரத்தை சுங்கப் பகுதியினருக்கு அறிவிக்கத் தவறியதற்காகவே இக்கப்பலின் மாலுமிகளான இரு அமெரிக்கர்கள், இரு நியூஸிலாந்துப் பிரஜைகள், ஒரு பிஜித்தீவுப் பிரஜை ஆகியோர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

### மக்கள்—

கள் தொகை இரண்டு கோடி எழுபத்தி நான்கு லட்சமாகும். அதாவது ஆயிரம் ஆண்களுக்கு 975 பெண்கள் உள்ளனர்.

இந்திய சனத்தொகை அடிப்படையில் தமிழ்நாடு 7 ஆம் இடத்தை வகிக்கிறது. இம்மாநில கல்வியறிவு 63 72 ஆக உயர்ந்துள்ளது. (இந்தியாவின் கல்வியறிவு 52 1 1)